# கம்பம் நகராட்சி

**2020–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (14.09.2020) ஆம் நாள் திங்கள் கிழமை முற்பகல் 11.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விரிவான விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் உள்ளோரை பயனாளிகளாக சேர்க்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 28.08.2020ஆம் தேதிய ந.க.எண். 12635/2020/UPA3-1,கடிதத்தின்படி அறிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.<br>மேலும், இத்திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் ஏற்கனவே கணக்கெடுப்பு செய்துள்ள பட்டியலின்படி வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோரை பயனாளிகளாக சேர்க்க கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவும், கணக்கெடுப்பு படிவத்தை கணினியில் பதிவேற்றம் செய்யவும் செலவீனம் மேற்கொள்ள உத்தேச செலவீனமாக ரூ. 1,00,000/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம். |
| **2.** | கம்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகள், போக்குவரத்து மற்றும் இதர வகையில் சேதமான சாலைகள் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் மேற்கொண்ட வகையிலும் சேதமடைந்த சாலைகளை மேம்பாட்டு பணிகள் செய்திட **ரூ. 500.00** இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, மேற்கண்ட பணிகளுக்கு அரசு திட்டங்களின் கீழ் முழுமானியத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி இந்நகர்மன்ற தீர்மான எண். 2030, நாள். 29.05.2020–ல் மன்ற அனுமதி பெறப்பட்டது.<br>அரசாணை (டி) எண். 303, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 09.09.2020–ன்படி ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்ட மான்யமாக 80சதவீதம் மற்றும் நகராட்சி பங்கு தொகையாக 20 சதவீதத்தில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிகள் செய்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | Improvement of B.T. Surface in R1- W.No.32,Sukkangal patti cross street( N to S), R2- W.No. 14, Nandhagopal samy nagar 2nd Street, R3,W.No.14, Nandhagopal samy kovil cross Street ( N to S & E to W ) R4-W.No. 9 Subramaniyasamy Kovil Cross Street(N to S), R5-W.No.25,Egaluthu Road 1st Cross Street(N to S),R6- W.No.25,Egaluthu Road 2nd Cross Street , W.No.25, R7-Egaluthu Road 3rd Cross Street R8-W.No.11,Cumbum mettu road cross street ( Muslim Street near odai bridge, Noonmeal Centre), R9-W.No.11,Cumbum mettu road cross street opp & near Ap petrol bulk , 60 feet cross street, R10- W.No.11,Cumbum mettu colony cross street, R11- W.No. 24, N.K.P. Raju Street( N to S), R12-W.No. 14, Krishnapuram( N to S & E to W) in cumbum municipality. ( Package I) | **200.00** |
| 2. | Improvement of B.T. Surface in R1-W.No. 4, Malayammal Puram Main Road, R2-W.No. 4, Malayammal puram Cross streets, R3-W.No. 31,Kakkan Colony Cross street ( Opp. Arivuthirukovil) R4-W.No. 31, Kakkan Colony Cross street ,R5-W.No. 31, Kakkan Colony Main Road,R6- W.No. 30,Angoore palayam T.T.V.Nagar,R7-W.No. 29,Maninagar cross Street in cumbum municipality. ( Package II) | **200.00** |

| | | |
|---|---|---|
| 3. | Improvement of B.T. Surface in R1-W.No.4,Isac Bothagar Street, R2-W.No. 28, Kalavasal Cross Street ( Police Quarters),R3-W.No. 33, Pasumpon Muthuramalingam Cross Street, R4-W.No. 19, Kalavsal Road Cross Street ,R5-L.F.Road Cross Street,R6-Thathappankulam kovil street Thathappankulam cross Street in cumbum municipality. ( Package III) | **100.00** |
| | Total | **500.00** |

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.**1904** நாள்.**31.12.2019** தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, ரூ. **3.10** இலட்சம் மதிப்பீட்டில் , இந்நகராட்சி எல்கைக்குள் தெருவிளக்கு வசதி இல்லாத பகுதிகளில் **70** இடங்களில் 30W திறன் உள்ள ஒளி உமிழ் விளக்குகள் சப்ளை செய்து பொருத்தும் பணிகள் செய்திட **28.08.2020** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி விபரம்** | **மதிப்பீட்டைவிட** | |
|---|---|---|---|
| | | **சதவீதம் குறைவு** | **சதவீதம் கூடுதல்** |
| **1.** | திரு.எல்.ராஜேந்திரன் | **–0.11** | **–** |
| **2.** | திரு.வி.கிருஷ்ணன் | **–** | **0.03** |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **(–)0.11** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. எல். ராஜேந்திரன் என்பவரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**4.** இந்நகராட்சி வார்டு எண் **8,** கோம்பைதெருவில் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்டுள்ள சிறு மின் விசைபம்பு அறை கட்டுமானம் பழுதாகி ஆபத்தான நிலையில் உள்ளதை இடித்து அகற்றிவிட்டு புதியதாக RCC Pillar அமைத்து **1000** லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறு மின் விசைபம்பு ஏற்படுத்தவும், மேற்படி பணிகள் நடைபெறும் வரை மின் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்திடவும் அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூபாய் **125000/–** மதிப்பீட்டில் செய்திட **17.08.2020**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி விபரம்** | **மதிப்பீட்டைவிட** | |
|---|---|---|---|
| | | **சதவீதம் குறைவு** | **சதவீதம் கூடுதல்** |
| **1.** | திரு.எல்.ராஜேந்திரன் | **–0.39** | **–** |
| **2.** | திரு.வி.கிருஷ்ணன் | **–** | **0.16** |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **–0.39** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.எல்.ராஜேந்திரன் என்பவரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** இந்நகராட்சி வார்டு எண். **30,** ஆங்கூர்பாளையம் சாலையில் உள்ள நுண்உரம் தயாரிப்பு மையத்தின் இயந்திரம் பழுதாகி இயங்காமல் உள்ளதை சரிசெய்து இயக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. **23000/–** க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், மேற்படி நுண்உர தயாரிப்பு பணியின் முக்கியத்துவம் கருதி விரைவில் பணி முடிக்கும் பொருட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர்/ தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று **09.09.2020**ம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. மன்ற அனுமதிக்கு.

| வ.எண் | விலைப்புள்ளி நிறுவன விபரம் | ரூபாய் |
|---|---|---|
| 1. | மாரிச்சாமி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கம்பம் | 22850.00 |
| 2. | ஆண்டவர் லேத் வெல்டிங் ஒர்க்ஸ் கம்ம் | 22890.00 |
| 3. | முருகன் லேத் வெல்டிங் ஒர்க்ஸ் கம்பம் | 22940.00 |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ. 22850/–க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மாரிச்சாமி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்கி பணி முடித்து உரிய தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 2190/2020/இ2)

6. இந்நகராட்சியில் தற்போது கீழ்கண்ட விபரப்படி 2340 தெருவிளக்ககள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | விளக்குகளின் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 1817 |
| 2 | 1x24 வாட்ஸ் T5 விளக்குகள் | 280 |
| 3 | 2x24 வாட்ஸ் T5 விளக்குகள் | 106 |
| 4 | 4x24 வாட்ஸ் T5 விளக்குகள் | 96 |
| 5 | 150 வாட்ஸ் எல்.இ.டி. விளக்குகள் | 41 |
| | மொத்தம் | 2340 |

மேற்கண்ட விளக்குகளில் தற்போது பராமரிக்க தேவையான மின் பொருட்கள், T5–க்குரிய உதிரி பொருட்கள் வெளிச்சந்தையில் கிடைக்காததால் மேற்படி விளக்குகளை பராமரிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. ஏனவே, மேற்படி T5 விளக்குகளில் முதற்கட்டமாக 96 எண்ணம் 4x24 வாட்ஸ் T5 விளக்கை 60 வாட்ஸ் எல்.இ.டி. விளக்காக மாற்றம் செய்யவும், 2x24 வாட்ஸ் T5 விளக்குகளில் 25 வாட்ஸ் எல்.இ.டி. விளக்காக மாற்றம் செய்திட ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 4,90,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :– 1)** மேற்படி நடிவடிக்கையின் மூலம் ஆண்டுக்கு 22513 யூனிட் மின் சேமிப்பும், ரூ. 1,42,957/–மின் கட்டணத்தில் சேமிப்பு ஆகும் என்பதால் மேற்படி பணி செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணிக்கான செலவினத்தை 2020–2021 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஒப்பம்/– திருமதி. இ. செல்வராணி
ஆணையாளர்(பொ),
கம்பம் நகராட்சி.

நாள். 14.09. 2020
இடம். கம்பம்